பிப்ரவரி - 11

**"என்னிமித்தம் உங்களை, நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷ ப்பட்டு களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."**

**- மத் 5 : 11, 12**

எதிர்ப்பும், அடிக்கடி துன்பப்டுதலும் தேவனுடைய ஊழியத்தில் சுறுசுறுப்பாக இருப்பதின் பலனாக ஏற்படுகிற தவிர்க்கக் கூடாத தொடர்ந்து வரும் காரியங்களாகும் அவைகள் விவேகத்துடனும், நேர்மையுடனும் சந்திக்கப்பட வேண்டும். இவைகள் தங்கள் நோக்கத்தில் தவறும் போது அந்த வேண்டுமென்றே எதிர்ப்பவரிடம் அவருடைய போக்கின் அபாயங்களை பெருமிதமான எச்சரிக்கைகளோடு எடுத்துச் சொல்லி, அவரைத் தன்னுடைய சொந்த போக்கில் செல்ல விட்டுவிட்டு ரட்சிப்பின் செய்தியை மற்றவர்களுக்குச் சொல்ல செல்ல வேண்டும். இவ்விதமாக சோதிக்கப்படுகிற எல்லோருக்கும், நமது கர்த்தர் அடைந்த எதிர்ப்பிலும் எந்த விதமாக அவர் அதை சந்தித்தார் என்பதிலும் மதிப்பு மிக்க பாடங்கள் இருக்கின்றன.

- Z '94, 368 (R 1735).

சாத்தான் இப்பொழுதுள்ள எல்லா அநுகூலங்களையும், பாவம், வஞ்சகம், தன்னையம், உலகத்தனம் இவைகளின் பட்சத்தில் வைத்திருப்பதின் காரணமாக தேவனுடைய பட்சமாகிய நீதி, சத்தியம், அன்பு, ராஜ்ய சிந்தை ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளுகிறவர்ளை அடிக்கடி துன்பப்படுதலை எதிர்பார்க்கவும் தாங்கிக் கொள்ளவும் வேண்டும். அவர்கள் பயப்படாதிருப்பார்களாக. ஏனென்றால், அதில் அவர்கள் பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளுடைய அந்நியோன்யத்தையும் மட்டுமல்லாமல், புதிய ஏற்பாட்டின் இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர், பரிசுத்தவான்கள், உயிர்த்தியாகிகள் ஆகியோருடைய அந்நியோன்யத்தையும் ஆவியில் அனுபவிக்கிறார்கள். ராஜ்ஜியத்தில் இயேசுவோடு பங்கு கொள்ளுவதே அவர்களுடைய மகிழ்ச்சியின் கிரீடமாகும்.

- P '32, 15.

**ஒத்த வாக்கியங்கள்:-**

மத் 5:10,44; 10:16,17,21-23,28; 23:34,35; 24:8-10; மாற்கு13:9-13; லூக் 6:22,23; 21:12-19; யோவா 15:18,19; 16:1,2; அப் 5:29,40-42; 1 கொரி 4:9-13; 2கொரி 4:8-12; 6:4,5,8-10; 11:23-27; 12:10; பிலி 1:12-14; எபி 11:25-27,33-38; 1பேது 4:12-19; வெளி 2:3,10;

**கோபுர வாசிப்பு : Z '14, 291 (R 5544).**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் என்ன உபத்திரங்களை அடைந்தேன்? அவைகள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டன? அவை எதில் முடிந்ததன?